ஆனந்தம்
இளைஞர் நல அமைப்பு

07.05.2026

பெறுதல்:

உயர்திரு. இயக்குனர் அவர்கள்,

பள்ளிக்கல்வித்துறை, சென்னை.

மதிற்பிக்குரிய அய்யா,

வணக்கம்.

அரசு மற்றும் அரசு உதவி பெறும் பள்ளிகளில் படித்து பன்னிரெண்டாம் வகுப்பில் சிறந்த மதிப்பெண்களை பெற்ற வசதியில்லாத மாணவர்களின் உயர்கல்விக்கு உதவ விவரங்கள் கோருதல்:

அரசு மற்றும் அரசு உதவி பெறும் பள்ளிகளில், 12ஆம் வகுப்பு முடித்த பிறகு, மேற்கொண்டு படிக்க வசதி இல்லாத மாணவ - மாணவியரை கண்டறிந்து 100% கல்வி உதவி தொகை வழங்கி வருகிறது – "ஆனந்தம்" (Anandham Youth Foundation)
கடந்த 14 ஆண்டுகளில் பல்வேறு மாவட்டங்களைச் சேர்ந்த அரசுப் பள்ளித் தலைமை ஆசிரியர்களின் பரிந்துரையின் அடிப்படையில் பெறப்பட்ட விண்ணப்பங்களில் இருந்து, பொருளாதார ரீதியாக மிகவும் பின்தங்கிய மாணவர்களைத் தேர்ந்தெடுத்து அவர்களுக்கு 100% கல்வி உதவித் தொகையுடன் உயர் கல்வி வழங்கி வருகிறோம். "ஆனந்தம்" அமைப்பின் மூலம் இதுவரை **1159** மாணவர்கள் உயர்கல்வி பயின்றுள்ளனர்.

ஆனந்தம் மூலம் உயர்கல்வி பயின்ற மாணவர்கள் விவரம் - துறை வாரியாக.

| | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| MBBS | 47 | Engineering | 444 | Arts & Science | 511 | Paramedical law, CA & Others | 157 | **Total** | **1159** |

ஆனந்தம் அமைப்பின் மூலம் படித்து முடித்த மாணவர்கள் மத்திய, மாநில அரசுப்பணிகளிலும் INFOSYS, IBM, TCS, CTS, ACCENTURE, TVS, ITC, SOUTH INDIA BANK, MURUGAPPA GROUP, HCL உள்ளிட்ட இந்தியாவின் முன்னணி நிறுவனங்களிலும் பணியாற்றி வருகின்றனர்.

ANANDHAM YOUTH FOUNDATION
15/21, 2nd Lane, Pasumarthi Street, Rangarajapuram, Kodambakkam, Chennai - 24
Phone : (044) 4585 0307, Cell : +91 95519 39551
www.anandham.org | E-mail : anandhamfoundation@gmail.com

இந்த ஆண்டிலும் (2026-2027) ஆனந்தம் கல்வி உதவிதிட்டத்தின் கீழ் மாணவர்களைத் தேர்வு செய்ய இருக்கிறோம். அதற்காக கீழ்க்கண்ட விவரங்கள் மற்றும் உதவிகளைக் கோருகிறோம்.

வேண்டுகோள்:

1. 12ஆம் வகுப்பில் சிறந்த மதிப்பெண்கள் பெற்று மேற்படிப்பை தொடர வசதி இல்லாத மாணவர்களின் விவரங்களை ஆனந்தம் அமைப்புக்கு பரிந்துரை செய்திட அனைத்து அரசு மற்றும் அரசு உதவி பெறும் பள்ளிகளின் தலைமை ஆசிரியர்களுக்கும் சுற்றறிக்கை அனுப்புமாறு, முதன்மை கல்வி அலுவலர்களுக்கு அறிவுறுத்த வேண்டுகிறோம்.
2. இணைய வழி மூலம் நடக்கும் மாவட்ட முதன்மை கல்வி அலுவலர்கள் கூட்டத்தில், ஆனந்தம் அமைப்பிற்கு ஐந்து நிமிட நேரம் ஒதுக்கித் தருமாறு பணிவுடன் கேட்டுக்கொள்கிறோம். இதன் மூலம் ஆனந்தம் அமைப்பு மாணவர்களை தேர்வு செய்யும் முறையைப் பற்றி விளக்கிக் கூறி, பொருளாதாரத்தில் மிகவும் பின் தங்கிய தகுதியான மாணவர்களுக்கு உதவிகள் சென்றடைய பெரும் உதவியாக இருக்கும்.

ஆனந்தம் கல்வி உதவி திட்டத்திற்கான Student Application Link, www.anandham.org என்ற ஆனந்தம் இணையதளத்தில் இருக்கும்.

வசதி வாய்ப்பற்ற மாணவர்களின் உயர்கல்வி கனவை நனவாக்கும் ஆனந்தம் அமைப்பின் பணிக்கு தங்களது வாழ்த்துக்களையும் ஆதரவையும் வேண்டுகிறோம்.

தொடர்புக்கு,
7010987336 / 9551939551
anandhamfoundation@gmail.com
www.anandham.org

நன்றி

For Anandham Youth Foundation

9841013532

செல்வகுமார் எஸ்
நிறுவனர்

ANANDHAM YOUTH FOUNDATION
15/21, 2nd Lane, Pasumarthi Street, Rangarajapuram, Kodambakkam, Chennai - 24
Phone : (044) 4585 0307, Cell : +91 95519 39551
www.anandham.org | E-mail : anandhamfoundation@gmail.com